## முதல் கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்

முன்னிலை:- திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,
முதல் கூடுதல் அமர்வு நீதிபதி,

2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 18 ம்நாள் சனிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ பராபவ வருடம்-சித்திரைத் திங்கள் 5 ம்நாள்)

## குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.13/2021

(CNR No.TNED01-000156-2021)
against
**குற்றவியல் பல்வகை மனு எண்.2243/2020**
in DVA No.2/2020

| | | | |
|---|---|---|---|
| 1. | எந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப் -பட்டுள்ளது. | : | நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெருந்துறை. |
| 2. | விசாரணை நீதிமன்றத்தின் குற்றவியல் பல்வகை மனு எண். | : | குற்றவியல் பல்வகை மனு எண். 2243/2020 in DVA No.2/2020<br>தேதி 09.12.2020. |
| 3. | குற்றவியல் மேல்முறையீட்டு எண். | : | குற்றவியல் மேல்முறையீட்டு எண். 13/2021. |
| 4. | மேல்முறையீட்டாளர்/மனுதாரர் பெயர், விலாசம். | : | 1. எஸ்.பிரபு (வயது 37),<br>த/பெ.ஆர்.சுப்ரமணியன்,<br>2. ஆர்.சுப்ரமணியன் (வயது 73),<br>த/பெ.லேட்.ராமசாமி,<br>3. எஸ்.சரஸ்வதி (வயது 67),<br>க/பெ.ஆர்.சுப்ரமணியன்,<br>(வசிக்குமிடம்-கதவு எண்.40/35,<br>கிருஷ்ணமா நாயுடு 2 வது வீதி,<br>ஒண்டிப்புதூர், கோயம்புத்தூர்-641 016) |
| 5. | எதிர்மேல்முறையீட்டாளர்/மனுதாரர் புகார்தாரர் பெயர், விலாசம். | : | 1. பி.லோகநாயகி (வயது 32),<br>க/பெ. எஸ்.பிரபு,<br>த/பெ.கே.பரமேஷ்,<br>2. இளவர் பி.விதுலா (வயது 9),<br>த/பெ. எஸ்.பிரபு,<br>(இளவருக்காக அவரது தாயார் பி.லோகநாயகி)<br>3. இளவர் பி.ஸ்ரீ சக்தி (வயது 7),<br>த/பெ. எஸ்.பிரபு,<br>(இளவருக்காக அவரது தாயார் பி.லோகநாயகி)<br>(வசிக்குமிடம் கதவு எண்.2/356,<br>லோகநாதன் குவார்ட்டர்ஸ், |

| | | | |
|---|---|---|---|
| | | | மேட்டுப்புதூர், விஜயமங்கலம் அஞ்சல், ஈரோடு-638 056) |
| 6. | விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு விவரம் | : | 1 ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ.5,000/- வீதம் மனுதாரருக்கும் அத்துடன் (as well as) இளவர் குழந்தைகளுக்கும் செலுத்த வேண்டுமென்றும் மேற்படி தொகையை 1 ம் மனுதாரரின் வங்கிக் கணக்கில் மனு தாக்கல் செய்த நாள் அதாவது 28.09.2020 முதல் அசல் மனு முடிவடையும் வரை செலுத்த வேண்டுமென்றும், மனுதாரர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. |
| 7. | மேல்முறையீட்டின் தீர்ப்பு விவரம். | : | **முடிவாக,** இந்த குற்றவியல் மேல்முறையீட்டை பகுதியாக அனுமதித்து, பெருந்துறை, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் DVA No.2/2020 ல் குற்றவியல் பல்வகை மனு எண்.2243/2020 ல் 09.12.2020 ம் தேதி 1 ம் மேல்முறையீட்டாளர் இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ரூ.15,000/- செலுத்த வேண்டுமென்று பிறப்பித்த உத்தரவை மாற்றியமைத்து, 1 ம் மேல்முறையீட்டாளர் இடைக்கால ஜீவனாம்சமாக 1 ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு மாதம் ரூ.5,000/-மும், 2, 3 எதிர்மேல்முறை -யீட்டாளர்களுக்கு மாதம் தலா ரூ.2,500/- வீதம் (மொத்தம் இடைக்கால ஜீவனாம்ச தொகை மாதம் ரூ.10,000/-) அசல் மனு தாக்கல் செய்த தேதி முதல் அசல் மனு முடியும் வரை செலுத்த வேண்டுமென்றும், மேற்படி தொகையை 1 ம் மேல்முறை -யீட்டாளர் ஒவ்வொரு மாதமும் 5 ம் |

| | | |
|---|---|---|
| | | தேதிக்குள் நேரடியாகவோ அல்லது 1ம் எதிர்மேல்முறையீட்டாளரின் வங்கிக் கணக்கிலோ செலுத்த வேண்டுமென்றும் இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| | மேல்முறையீடு தாக்கல் செய்த நாள் | 18.01.2021 மற்றும் 25.01.2021 |
| | கோப்பில் எடுக்கப்பட்ட நாள் | 29.01.2021 |
| | நீதிமன்றத்தில் ஆஜராக அறிவிப்பு கொடுக்கப்பட்ட நாள் | 02.02.2021 |
| | வாதுரை நாள் | 07.054.2026 |
| | தீர்ப்புரை நாள் | 18.04.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக 07.04.2026ம்தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மேல்முறையீட்டாளர்கள்/ எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.பி.சுரேஷ், வழக்கறிஞர் அவர்களும், எதிர்மேல்முறை -யீட்டாளர்கள்/மனுதாரர்கள் தரப்பில் திரு.எஸ்.மகாராஜசேகர், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மேல்முறையீடு மற்றும் வழக்கு கோப்புக்களை பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:-

**தீர்ப்புரை**

பெருந்துறை, நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குற்றவியல் பல்வகை மனு எண்.2243/2020 **in DVA No**.2/2020ல் கடந்த 09.12.2020ம்தேதி பிறப்பித்த உத்தரவால் அதிருப்தியுற்ற எதிர்மனுதாரர்கள் மேற்படி உத்தரவை ரத்து செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுமென்று கோரி இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **குு.ப.மனு எண்.2243/2020 in DVA No.2/2020**

28.09.2020 தேதியிட்ட இம்மனு குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை காக்கும் சட்டம் பிரிவு 23 ன்கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு,

(1) எதிர்மனுதாரர்கள் மாதம் ரூ.50,000/-ஐ இடைக்கால ஜீவனாம்சமாக 23.08.2020 தேதி முதல் அசல் மனு முடிவடையும் வரை செலுத்த வேண்டுமென்று உத்தரவிடக் கோரியும்,

(2) எதிர்மனுதாரர்களோ அவர்களுடைய ஆட்களோ எவரும் மனுதாரர்களையும் 1ம் மனுதாரரின் பெற்றோரையும் எவ்விதத்திலும் தொடர்பு கொள்ளக்கூடாது மற்றும் மனுதாரர்கள் வசிக்கும் இடத்திற்கும் 1ம் மனுதாரரின் பெற்றோர் வசிக்கும் இடத்திற்கும் வரக்கூடாது என்று உத்தரவிடக் கோரியும்,

(3) இடைக்கால ஜீவனாம்சமும் பாதுகாப்பு உத்தரவும் வழங்கக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>மனு உரையின் சுருக்கம்:-</u>**

1ம் மனுதாரர் 2, 3 மனுதாரர்களின் பாதுகாவலர் மற்றும் தாயார் ஆவார். மனுதாரர் அவருடைய திருமணத் தேதியிலிருந்து 22.08.2020 வரை எதிர்மனுதாரர் -களுடன் வசித்து வந்தார். மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை காக்கும் சட்டத்தின் கீழ் அசல் மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். அதனால் எதிர்மனுதாரர்கள் இந்த மனுதாரர்களை போன் மூலமாகவும் வேலையாட்கள் மூலமாகவும் ஆவணங்களையும் சாட்சியங்களையும் ஒப்படைக்க வேண்டுமென்று மிரட்டி வருகிறார்கள். எனவே, மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுவை அனுமதிக்க வேண்டும்.

4. **<u>எதிர் உரையின் சுருக்கம்:-</u>**

மனுச் சங்கதிகள் பொய்யானவை. எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களை ஆவணங்களையும் சாட்சியங்களையும் ஒப்படைக்க வேண்டுமென்று மிரட்டியதாகச் சொல்வது தவறு. உண்மையில், 26.05.2010ம்தேதி 1ம் மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்தின்போது திருமணச் செலவுகள் அனைத்தையும் 1ம் எதிர்மனுதாரரின் குடும்பத்தினரே ஏற்றுக் கொண்டனர். எவ்வித வரதட்சணையும் கேட்கப்படவில்லை. திருமணத்தின் பயனாக 2ம் மனுதாரர் 25.03.2011 ம் தேதியிலும், 3ம் மனுதாரர் 11.09.2013 ம்தேதியிலும் பிறந்தார்கள். அதன் பின்னிட்டு 1ம் மனுதாரரின் சகோதரர் சரவணன் என்பவர் குடும்ப விசயத்தில் முழுமையாக தலையிட்டு அதனால் குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்டது. 1ம் மனுதாரரின் தாயார் எப்போதும் 1ம் எதிர்மனுதாரரை அவமரியாதையாக பேசி வருகிறார். அதன் பின்னிட்டும் 1ம் மனுதாரரின் தாயாரும், சகோதரரும் பிரச்சினைகளை

ஏற்படுத்தி அதனால் 1ம் எதிர்மனுதாரரையும் அவருடைய பெற்றோரையும் அவமதித்து வந்தார்கள். எனவே, 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய பெற்றோரிடமிருந்து பிரிந்து வாடகை வீட்டில் மூன்று முறை வசித்து வந்தார். 1ம் மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரரின் அனைத்து நடவடிக்கைகளையும் பொருத்துக் கொண்ட 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரை தன்னுடன் குடியிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆனால், 1ம் மனுதாரர் மறுத்துவிட்டார். மேலும் 22.08.2020ம்தேதி பாத்திரங்களை எடுத்துப் போட்டு உடைத்தும் குழந்தைகளை அடித்தும் காயப்படுத்திவிட்டார். அதுமட்டுமல்லாமல் அடுத்தநாள் 23.08.2020ம்தேதி 1ம் மனுதாரரின் குடும்ப உறுப்பினர்கள் காவல்நிலையத்தில் பொய் புகாரும் கொடுத்துவிட்டார்கள். அதனடிப்படையில் 1ம் எதிர்மனுதாரரை போலீசார் விசாரணை செய்து வீட்டில் இருந்த 1ம் மனுதாரரின் ஆவணங்கள், குழந்தைகளின் ஆவணங்கள் மற்றும் துணிமணிகளை எடுத்துச் சென்று விட்டார்கள். இந்த 1ம் எதிர்மனுதாரரும் எப்போதும் கடமையுள்ள கணவராகவும் தகப்பனாராகவும் நடந்து கொண்டார். ஆனால் 1ம் மனுதாரர் வேண்டுமென்றே 1ம் எதிர்மனுதாரருடன் சண்டையிட்டு வந்தார், அதற்கு அவருடைய பெற்றோரும் உறுதுணையாக இருக்கிறார்கள். 1ம் மனுதாரரின் நடவடிக்கையால் இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு எல்லா வகையிலும் இடையூறும் மன வேதனையும் ஏற்பட்டு வந்தது. 23.09.2020லிருந்து 1ம் எதிர்மனுதாரரும் 1ம் மனுதாரரும் பிரிந்து வாழ்கிறார்கள். இதனால் குழந்தைகளின் கல்வி படிப்பும் பாதிக்கப்படுகிறது. மேலும் 1ம் மனுதாரரின் சகோதரர் பல வகைகளில் புகார்களை கொடுத்து இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி வருகிறார். அதனால் இந்த 1ம் எதிர்மனுதாரர் 23.09.2020ம்தேதி வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி அதனை 1ம் மனுதாரர் பெற்றுக் கொள்ளாமல் தவிர்த்துவிட்டார். எப்போதும் இந்த 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமாக இருக்கிறார். சேர்ந்து வாழக் கோரி இந்த 1ம் எதிர்மனுதாரர் மனுவையும் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளார்.

5. இந்த 1ம் எதிர்மனுதாரர் கார் பழுதுபார்க்கும் ஒர்க் ஷாப் வைத்துள்ளார். அதன் மூலமாக அரையாண்டு வருமானம் ரூ.21,001/- மட்டுமே பெற்று வருகிறார். 2, 3 மனுதாரர்கள் இந்த 1ம் எதிர்மனுதாரருடன் வசித்து வர மிகுந்த விருப்பத்துடன் இருந்து வருகிறார்கள். ஆனால் 1ம் மனுதாரர்தான் வேண்டுமென்றே அவருடைய பெற்றோரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்து வருகிறார். 1ம் மனுதாரரின் நடவடிக்கையால் 3ம் எதிர்மனுதாரர் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி படுத்த படுக்கையாகிவிட்டார். பெருந்துறை மற்றும் கோயம்புத்தூர்

நீதிமன்றங்களுக்கு அலைந்து மிகுந்த மன வேதனையை அடைந்துவிட்டார்கள். எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

6. விசாரணை நீதிமன்றத்தில் இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

7. விசாரணை நீதிமன்றம் முழு விசாரணைக்கு பிறகு, மனுவை அனுமதித்து 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ.5,000/- வீதம் மனுதாரருக்கும் அத்துடன் (as well as) இளவர் குழந்தைகளுக்கும் செலுத்த வேண்டுமென்றும் மேற்படி தொகையை 1ம் மனுதாரரின் வங்கிக் கணக்கில் மனு தாக்கல் செய்த நாள் அதாவது 28.09.2020 முதல் அசல் மனு முடிவடையும் வரை செலுத்த வேண்டுமென்றும், மனுதாரர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிட்டுள்ளது. மேற்படி உத்தரவால் குறைவுற்ற எதிர்மனுதாரர்கள் இந்த குற்றவியல் மேல்முறையீட்டைதாக்கல் செய்துள்ளார்கள்.

8. <u>மேல்முறையீட்டின் சுருக்கம்:-</u>

விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு சட்டப்படியும் சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரரின் குறைந்த வருமானத்தைக் குறித்து விசாரணை நீதிமன்றம் கருத்திற்கொள்ளாமல் மாதம் ரூ.15,000/- இடைக்கால ஜீவனாம்சமாக உத்தரவிட்டுள்ளது தவறானது. இடைக்கால ஜீவனாம்சம் வழங்குவதற்கு மேதகு உச்சநீதிமன்றம் வகுத்துள்ள வழிகாட்டுதல்களை விசாரணை நீதிமன்றம் பின்பற்ற தவறிவிட்டது. இந்த 1ம் எதிர்மனுதாரர் குழந்தைகளின் எதிர்கால நலனையும் கல்வியையும் கருத்திற்கொண்டு கல்விச் செலவை செலுத்திவருகிறார். பண்டிகை காலங்களில் அவர்களுக்குத் தேவையான அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறார். இந்த 1ம் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழக் கோரி கொடுத்த அறிவிப்பை 1ம் மனுதாரர் பெற மறுத்துவிட்டார். விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் மாதம் ரூ.5,000/- இந்த 1ம் எதிர்மனுதாரர் செலுத்தி வருகிறார். ஆனால் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவில் ஒவ்வொருவருக்கும் என்ற வார்த்தை காணப்படவில்லை. எனவே, மேற்கண்ட காரணங்களினால் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டும்.

9. <u>இந்தக் குற்றவியல் மேல்முறையீட்டில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள்:-</u>

| | |
|---|---|
| 1 | பெருந்துறை, நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கு.ப.வ.மனு எண்.2243/2020 in DVA No.2/2020 ல் 09.12.2020 ம்தேதி பிறப்பித்த உத்தரவு சரியானதா? |

| | |
|---|---|
| 2 | இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா? |

10. இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் தீர்வு காண்பதற்கு வசதியாக, விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்களை மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் என்று அழைக்கப்பட்டது போன்றே இந்த மேல்முறையீட்டிலும் அழைக்கப்படுகின்றனர்.

11. <u>பிரச்சினை எண்.1 மற்றும் 2:-</u>

விசாரணை நீதிமன்றம், வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து மனுதாரர் தாக்கல் செய்த DVA No.2/2020 ல் கு.ப.வ.மனு எண்.2243/2020 ல் கடந்த 09.12.2020 ம்தேதி மனுவை அனுமதித்து 1 ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ.5,000/- வீதம் மனுதாரருக்கும் அத்துடன் (as well as) இளவர் குழந்தைகளுக்கும் செலுத்த வேண்டுமென்றும் மேற்படி தொகையை 1 ம் மனுதாரரின் வங்கிக் கணக்கில் மனு தாக்கல் செய்த நாள் அதாவது 28.09.2020 முதல் அசல் மனு முடிவடையும் வரை செலுத்த வேண்டுமென்றும், மனுதாரர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

12. மேல்முறையீட்டாளர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், விசாரணை நீதிமன்றத்தில் 1 ம் மேல்முறையீட்டாளரின் வருமானம் குறித்து சரிவர பரிசீலனை செய்யவில்லை என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு மாதம் ரூ.15,000/-ஐ இடைக்கால ஜீவனாம்சமாக வழங்கும்படி உத்தரவு பிறப்பித்துள்ளது சரியானதல்ல என்றும் ஏற்கனவே குடும்பத்தில் 1 ம் மேல்முறையீட்டாளரின் வருமானத்தின் அடிப்படையில்தான் ஜீவனாம்சம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற சட்ட நியதியைப் பின்பற்றாமல் விசாரணை நீதிமன்றம் முடிவு செய்திருப்பது தவறானது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் மளிகைப் பொருட்களுக்கு மாதம் ரூ.3,500/-ம், காலனிகளுக்கு ரூ.4,000/- என்றும் சொல்லியிருப்பதை விசாரணை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அதிகப்படியான இடைக்கால ஜீவனாம்சம் வழங்கியிருப்பது தவறானது என்றும், மேல்முறையீட்டாளர், 2, 3 எதிர்மேல்முறையீட்டாளர்களான குழந்தைகளின் படிப்புச் செலவினை செய்து வருவதாகவும், மேல்முறையீட்டாளர் தாயாரை பராமரித்து வருவதாகவும், மேல்முறை -யீட்டாளருக்கு மாதம் ரூ.18,000/- மட்டுமே வருமானம் என்றும், ஏற்கனவே இடைக்கால ஜீவனாம்சமான மாதம் ரூ.5,000/-ஐ தவறுகையில்லாமல் செலுத்தி வருவதாகவும், ஆகவே இடைக்கால ஜீவனாம்ச தொகையான மாதம் ரூ.15,000/-

செலுத்த ஏற்பட்டுள்ள விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

**13.** எதிர்மேல்முறையீட்டாளர்கள்/மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், 1ம் மேல்முறையீட்டாளருடன் எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஒண்டிப்புதூர், கோயம்புத்தூர் மாமனாரின் இல்லத்தில் வாழ்ந்து வந்ததாகவும் மேல்முறையீட்டாளர்கள் குடும்ப வன்முறையை செய்ததன் காரணமாகப் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் எதிர்மேல்முறை -யீட்டாளர்களுக்கு மாதம் ரூ.5,000/- வீதம் ரூ.15,000/-ஐ இடைக்கால ஜீவனாம்சமாக செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது சரியானது என்றும், 1ம் மேல்முறையீட்டாளருக்கு கோவை, ஒண்டிப்புதூர், திருச்சி சாலை, கிருஷ்ணா நாயுடு வீதியில் 5 செண்ட் நிலம் இருப்பதாகவும், அதில் உள்ள வீட்டை வாடகைக்கு விட்டு மாதம் ரூ.10,000/- வாடகை வருமானம் வருவதாகவும், கேரளா மாநிலம், பாலக்காடு மாவட்டம், செட்டியார்குளம் என்ற ஊரில் 2 ஏக்கர் தோட்டம் இருப்பதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் பெயரில் 5 செண்ட் இடம் வாங்கப்பட்டு அதில் வீடு கட்டி வாடகைக்கு விட்டு மாத வாடகை ரூ.7,000/- பெற்று வருவதாகவும், 1ம் மேல்முறையீட்டாளர் கார் ஒர்க் ஷாப் வைத்து தொழில் செய்தும், ரியல் எஸ்டேட் புரோக்கல் தொழில், உபயோகப்படுத்தப்பட்ட கார்களை வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்தும் 5 வங்கிகளில் வங்கிக் கணக்குகள் வைத்துக் கொண்டு வருமானம் ஈட்டி வருவதாகவும், 1ம் மேல்முறையீட்டாளருக்கு மேற்படி இடைக்கால ஜீவனாம்ச தொகையைக் கொடுப்பதற்கு போதுமான வசதி உள்ளது என்றும், குழந்தைகளை 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்தான் படிக்க வைத்து வருவதாகவும், மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் காப்பீடு பிரிமியம் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் பிரிமியத் தொகைகள் செலுத்தியதற்கான ரசீதுகள் என்றும், ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீட்டிற்கு மாதம் ரூ.30,000/-க்கு செலுத்தி வருவதாகவும், எனவே, இந்த எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு மாதம் ரூ.15,000/-ஐ இடைக்கால ஜீவனாம்சமாக செலுத்த மேல்முறையீட்டாளருக்கு போதுமான வசதியிருப்பதால் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை உறுதி செய்ய வேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

**14.** மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் இந்த மேல்முறையீட்டில் எதிர்மேல்முறையீட்டாளர் பெயரில் உள்ள ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீடு சம்பந்தமன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பினும் அவை யாவும் குறியீடு

செய்யப்படவில்லை. மேலும் இந்த மேல்முறையீட்டில் இருதரப்பிலும் வருமானம் மற்றும் கடன் சம்பந்தமான (Assets and liabilities) ஆவணங்கள் குறித்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மேல்முறையீட்டாளர் கார் மெக்கானிக்காக பணிபுரிந்து மாதம் ரூ.18,000/- வருமானம் ஈட்டுவதாகச் சொல்லப்பட்டுள்ளது. எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் 1ம் மேல்முறையீட்டாளருக்கு நிலம், வீடு இருப்பதாகவும், வீட்டை வாடகைக்கு விட்டும், கார் ஒர்க் ஷாப் வைத்து தொழில் செய்தும், கார் செகண்ட் சேல் தொழில் செய்தும், ரியல் எஸ்டேட் புரோக்கல் தொழில் செய்தும் வருமானம் ஈட்டுவதாகச் சொல்லப் -பட்டிருப்பினும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மேல்முறையீட்டாளர்கள் தரப்பிலும் கார் மெக்கானிக்காக பணிபுரிந்து மாதம் ரூ.18,000/- மட்டுமே வருமானம் ஈட்டுவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி 1ம் மேல்முறையீட்டாளர் கார் மெக்கானிக்காக வேலை செய்கிறரா? அல்லது உரிமையாளரா? என்பது குறித்து குறிப்பாக சொல்லப்படவில்லை. விசாரணை நீதிமன்றத்தில் 1ம் மேல்முறையீட்டாளரின் வருமானம் குறித்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லப்படவில்லை. விசாரணை நீதிமன்றத்தில் அசல் மனு நிலுவையில் உள்ளதால் மேற்படி அசல் மனுவில் இருதரப்பினரும் வருமானம் மற்றும் கடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்து அதனடிப்படையில்தான் இருதரப்பினரின் பொருளாதார வசதி குறித்து நிர்ணயம் செய்ய இயலும். எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ரூ.15,000/- வழங்க உத்தரவிடப்பட்டிருப்பினும் 1ம் மேல்முறையீட்டாளரின் வயது மற்றும் நிலையான வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் இடைக்கால ஜீவனாம்சத்தை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்பதால் மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வருமானம் மற்றும் கடன் சம்பந்தப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள தொகையான ரூ.18,000/- அடிப்படையில் 1ம் மேல்முறையீட்டாளரின் வயதைக் கருத்திற்கொண்டு 1ம் மேல்முறையீட்டாளர் எதிர்மேல்முறையீட்டாளர் -களுக்கு இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ரூ.15,000/- செலுத்தும் அளவுக்கு போதுமான வசதியில்லை என்பது தெரிய வருவதால் 1ம் மேல்முறையீட்டாளர் இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ரூ.15,000/- செலுத்த வேண்டுமென்ற உத்தரவை மாற்றியமைத்து 1ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு மாதம் ரூ.5,000/-மும், 2, 3 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு மாதம் தலா ரூ.2,500/- வீதம் (மொத்தம் இடைக்கால ஜீவனாம்ச தொகை மாதம் ரூ.10,000/-) இடைக்கால ஜீவனாம்சமாக அசல் மனு தாக்கல் செய்த தேதி முதல் அசல் மனு முடியும் வரை 1ம் மேல்முறையீட்டாளர் செலுத்த

வேண்டுமென்றும், மேற்படி தொகையை ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் நேரடியாகவோ அல்லது 1ம் எதிர்மேல்முறையீட்டாளரின் வங்கிக் கணக்கிலோ செலுத்த வேண்டுமென்றும் இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்து விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை மாற்றியமைத்து இந்த மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்பட்டு மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** இந்த குற்றவியல் மேல்முறையீட்டை பகுதியாக அனுமதித்து, பெருந்துறை, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் DVA No.2/2020ல் குற்றவியல் பல்வகை மனு எண்.2243/2020ல் 09.12.2020ம்தேதி 1ம் மேல்முறையீட்டாளர் இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ரூ.15,000/- செலுத்த வேண்டுமென்று பிறப்பித்த உத்தரவை மாற்றியமைத்து, 1ம் மேல்முறையீட்டாளர் இடைக்கால ஜீவனாம்சமாக 1ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு மாதம் ரூ.5,000/-மும், 2, 3 எதிர்மேல்முறையீட்டாளர் -களுக்கு மாதம் தலா ரூ.2,500/- வீதம் (மொத்தம் இடைக்கால ஜீவனாம்ச தொகை மாதம் ரூ.10,000/-) அசல் மனு தாக்கல் செய்த தேதி முதல் அசல் மனு முடியும் வரை செலுத்த வேண்டுமென்றும், மேற்படி தொகையை 1ம் மேல்முறையீட்டாளர் ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் நேரடியாகவோ அல்லது 1ம் எதிர்மேல்முறையீட்டாளரின் வங்கிக் கணக்கிலோ செலுத்த வேண்டுமென்றும் இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக ஒலிவடிவில் சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 18ம்நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் பகரப்படுகிறது.

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.04.18 18:22:52 +0530

முதல் கூடுதல் அமர்வு நீதிபதி,
ஈரோடு.

**நகல்:**

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

<u>அசல்/வரைவு தீர்ப்புரை</u>
<u>கு.மே.வ.எண்.13/2021</u>
நாள் 18.04.2026
மு.கூ.அ.நீ.ம., ஈரோடு.